

# பயம் மற்றும் ஆபத்துக்கு இடையே கர்த்தரின் நம்பிக்கையும் உதவியும்



எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் - சங்கீதம் 121:1-2.

தாவீது பெலிஸ்தியரிடமிருந்து ஓடிவந்து பெரும் ஆபத்தை எதிர்கொண்டபோது, சங்கீதம் 56-ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்க அவர் தேர்ந்தெடுத்தார்:

*நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?*

இதேபோல், அப்போஸ்தலர் பவுல் தீமோத்தேயுவை நினைவூட்டுகிறார், தேவன் நமக்கு பயத்தின் ஆவியை கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோத்தேயு 1:7).

நாம் கவலையை எதிர்கொள்ளும்போது இந்த விவிலிய கதாபாத்திரங்களின் வார்த்தைகள் நமக்கு எவ்வாறு உதவுகின்றன?

உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை - (சங்கீதம் 121:3-4).



இன்று, நிச்சயமற்ற தன்மை மட்டுமே மாறாமல் இருக்கிறது. இன்று நாம் வாழும் உலகம் அனைத்து வகையான சிக்கல்களிலும்-இயற்கை பேரழிவுகள், போர்கள் மற்றும் தொற்றுநோய்களால் இன்னமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த கவலைகள், அச்சங்கள் மற்றும் சந்தேகங்கள் இருந்தபோதிலும், உதவிக்காக நம்முடைய அழுகையை கர்த்தர் கேட்கிறார் என்பதை அறிந்து நாம் ஆறுதலடைய முடியும் என்பதை வேதாகமம் தொடர்ந்து நமக்கு நினைவூட்டுகிறது (1 பேதுரு 3:12), நாம் அனுபவிக்கும் குழப்பங்களுக்கு மத்தியில் அவரிடத்தில் நாம் இளைப்பாற வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (மத்தேயு 11:28-30).

கர்த்தர் உன்னைக் காக்கிறவர்;
கர்த்தர் உன் வலதுபக்கத்திலே
உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே
வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும்
உன்னைச் சேதப்படுத்துவதில்லை
- (சங்கீதம் 121:5-6).



நமக்கு அதிக குழப்பத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்ளும்போது, கவலை மற்றும் பயத்தின் காலநிலைக்கு நாம் அடிபணியாமல், நம்முடைய சுமைகளை அவர்மீது சுமத்துவதன் மூலம் கர்த்தருடைய வாக்குறுதிகளில் உறுதியாக நின்று அவருடைய சமாதானத்திற்காக ஜெபிப்போம் (பிலிப்பியர் 4:6-7).

COVID-19 தொற்றுநோயை கிறிஸ்துவின் சரீரமாக நாம் எதிர்கொள்வதால், நம்முடைய தற்போதைய சூழ்நிலைகளால் நாம் சோர்வடையாமல், நன்மைக்காக ஒன்றிணைந்து செயல்படுவதாக உறுதியளிக்கும் நம்முடைய பரலோகத் தகப்பன் மீது நம்பிக்கை வைப்போம் (ரோமர் 8:28). நாம் கர்த்தரின் பிள்ளைகள் என்பதால், அவரிடம் ஒரு நித்திய நம்பிக்கை இருக்கிறது என்பதை அறிந்து ஆறுதல் பெறலாம்.

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார் - (சங்கீதம் 121:7-8).



## ஜெபக் குறிப்புகள்:

- வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் முழுமையாக குணமடைய பிரார்த்தனை செய்யுங்கள்.
- பல்வேறு நாடுகளில் உள்ள அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அவர்கள் பணியாற்றும்போது அவர்கள் மீது கர்த்தரின் ஞானத்திற்காக ஜெபியுங்கள்.
- எஞ்சியவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க தங்கள் பொறுப்புகளை உண்மையாகச் செய்து வரும் சுகாதார ஊழியர்கள் மற்றும் காவலாளிகள் போன்ற முன்னணி தொழிலாளர்கள் மீது கர்த்தரின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.
- சிங்கப்பூரில் உள்ள கிறிஸ்தவ தலைவர்கள் தங்கள் தேவாலயங்களுக்கு சரியான முடிவுகளை எடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று ஜெபியுங்கள்.

நீங்கள் ஜெபம் செய்தபின், சங்கீதம் 91-ல் உள்ள வார்த்தைகளைத் தியானிக்க சிறிது நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். அன்பான, உண்மையுள்ள கர்த்தர் எப்போதும் தம் பிள்ளைகளை எவ்வாறு பாதுகாக்கிறார் என்பதை அழகாகவும் சரியான நேரத்திலும் நினைவூட்டுகிறது:

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்
சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம்,
என் கோட்டை, என் தேவன், நான்
நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும்,
பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.

அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்;
அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்;
அவருடைய சத்தியம் உனக்குப்
பரிசையும் கேடகமுமாகும்.

இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில்
பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும்
கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில்
பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன்
வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும்
விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து,
துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான
கர்த்தரை உனக்குத் தாபரமாக்கொண்டாய்.

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது,
வாதை உன் கூடாரத்தை அணுகாது.

உன் வழிகளிலெல்லாம் உன்னைக்
காக்கும்படி, உனக்காகத் தம்முடைய
தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு
அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொண்டுபோவார்கள்.

சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும்
நீ நடந்து, பாலசிங்கத்தையும்
வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்.

அவன் என்னிடத்தில்
வாஞ்சையாயிருக்கிறபடியால்
அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை
அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை
உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான்,
நான் அவனுக்கு மறுஉத்தரவு
அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே
அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து,
அவனைக் கனப்படுத்துவேன்.

நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி,
என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.



新加坡
圣经公会
THE BIBLE SOCIETY®
OF SINGAPORE

7 ஆர்மெனியன் ஸ்ட்ரீட், பைபள்
ஹொவ்ஸ், சிங்கப்பூர் 179932
தொலைபேசி: (65) 6337 3222
மின்னஞ்சல்: selection@bible.org.sg
இணையதளம்: www.bible.org.sg

Tamil O.V. Bible - பரிசுத்த வேதாகமம் O.V. Copyright © 2017 by the Bible Society of India

இலவச கூடுதல் பிரதிகளுக்கு, தயவுசெய்து வெளியீட்டுத் துறையைத்
தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: (65) 6304 3785 / 3781
BSS 2020 10M ISBN 978 981 220 688 6